DINAMANI-21-AUG-2017

# நதிகள் மீட்பு விழிப்புணர்வுப் பேரணி

**கோவை, ஆக. 20:** ஈஷா அவுட் ரீச் சார்பில் நதிகள் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருசக்கர வாகன விழிப்புணர்வுப் பேரணி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஈஷா அவுட் ரீச்சின் வழிக்காட்டுதலின்கீழ் ஊர்த் தலைவர்கள், இளைஞர்கள், தன்னார்வத் தொண்டர்கள் இணைந்து நதிகளை மீட்போம், பாரதம் காப்போம் என்பதை வலியுறுத்தி பேரணி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

நரசிபுரத்தில் இருந்து தொடங்கிய பேரணி தேவராயபுரம், சந்தேகவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் உள்ளிட்ட 25 கிராமங்கள் வழியாகப் பேரணி நடைபெற்றது. இதே கோரிக்கையை வலியுறுத்தி இருட்டுப்பள்ளம், செம்மேடு, ஆலந்துறை பகுதிகளில் ஆகஸ்ட் 26-ஆம் தேதி இருசக்கர வாகனப் பேரணி நடைபெற உள்ளது.




நரசிபுரத்தில் நடைபெற்ற இருசக்கர வாகனப் பேரணியில் பங்கேற்றோர்.